RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt21442

# பத்துப்பாட்டில் அரச நிர்வாகம்

கோ. சரவணன் [அ, *], ப. தமிழரசி [அ]

[அ] மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோவை-21, இந்தியா

# Government Administration in Pathupattu

K. Saravanan [a, *], P. Thamilarasi [a]

[a] Department of Languages, Tamil Division, Karpagam Academy of Higher Education, Coimbatore-21, India

* Corresponding Author:
saravanan@gmail.com

Received: 19-06-2021
Revised: 23-09-2021
Accepted: 15-10-2021
Published: 30-10-2021

Check for updates

**ABSTRACT**

Although the Sangam period way of life was based on clan and community structures, the development of the Mullai land and the creation of the Marutham land contributed significantly to the formation of the monarchy. As a result, a social environment was created where the king had to be a person of strong character. The one who possessed the strength to lead was considered the king. The king had the responsibility to properly administer both his own land and the people living there. Consequently, he formed various groups under his rule and carried out the task of management. Such a strong social structure and the king's administrative abilities in managing these groups are depicted in the Tamil poetic texts, which describe his governance in various aspects.

**Keywords:** Administration, Management, The realm or dominion of the ruler, Royal authority, Groups

## முன்னுரை


நிர்வாகம் என்பது உயரிய நோக்கத்தோடு திட்டமிட்டு தனிமனிதன் தன்னையோ, ஒரு குழுவையோ முறையாக இயக்குதல், வழி நடத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் முதலானவை அடங்கிய ஆளுமையைக் குறிக்கும் ஒரு செயல்பாடாகும். இதில் திட்டமிடுதல், கொள்கைகளை வகுத்தல், சட்டங்களை இயற்றல், கண்காணித்தல், பரிசோதித்தல் போன்ற கூறுகளும் அடங்கும். அரசனின் நிர்வாகம் மேற்சொன்ன ஆளுமைகளை உள்ளடக்கியதாக அமையும். அவ்வகையில் பழந்தமிழ் இலக்கியமான பத்துப்பாட்டில் அரசனின் நிர்வாகச் செயல்பாடுகளும், அதுசார்ந்த மேலாண்மைச் செயல்பாடுகளும் அமைந்துள்ள விதத்தை இக்கட்டுரை ஆய்கிறது.

## அரச மேலாண்மையும் நிர்வாகமும்

பண்டைய தமிழ் இலக்கியங்களில் முலாண்மை என்னும் கருத்துதாக்கம் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலாண்மை என்பதற்கு பணிகளைப் பணி செய்பவர்களைக் கொண்டு திறமையுடனும், ஆற்றலுடனும் செய்து முடிக்கும் ஒரு கலையாகும். மேலாண்மை செலுத்தப்படும் முகமைகளாக நிர்வாக உறுப்புகள் அமைகின்றது. அதாவது “மேலாண்மை என்பது முகாமைத்துவம் என்று

**வழங்கப்படுகின்றது. அதாவது ஓர் இயக்கத்தின் அல்லது நிறுவனத்தின் கொள்கைகளை அடையும் முனைப்பை ஏற்படுத்துவது மேலாண்மையாகும். அத்தகு முனைப்பை நிர்வாகம் மூலமாக நிறுவனம் அடைந்துவிடும். நிர்வாகம் செயல்பாட்டு இயங்கு தளமாகவும், மேலாண்மை கண்காணித்து வழிநடத்தும் முனைப்புக் கருவியாகவும் இயங்குகின்றது" (முனைவர் சி. சித்ரா, தமிழ் இலக்கியங்களில் நிர்வாகவியல் சிந்தனைகள், தொகுதி.2, ப.113) எனக் குறிக்கின்றார் சி. சித்ரா** (Chitra, 2016).

**பத்துப்பாட்டில் அரசன் மேலாண்மை அதிகாரியாகவும், அமைச்சர்கள் உள்ளிட்ட பிற குழுவினர் நிர்வாகமாகவும் செயலாற்றுகின்றனர். இதில் அரசனின் மேரலாண்மை நாட்டை நிர்வகித்தல், பணியைப் பங்கீடு செய்தல், கண்காணித்தல் போன்ற செயலாக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த அடுக்கினை பின்வருமாறு பகுக்கலாம்.**




நாற்பெருங்குழு போன்றவை.

**இந்த அடுக்கு நிலையினையே தொல்காப்பியம்,**

**"படையும் கொடியும் குடையும் முரசும்**

**நடைநவில் புரவியும் களிறும் தேரும்**

**தாரும் முடியும் நேர்வன பிறவும்**

**தெரிவு கொள் செங்கோல் அரசர்க்குரிய" (தொல். பொருள்.1571)**

**என அரசனின் உடைமைகளாச் சுட்டுகின்றது. இந்த அமைப்பினைப் பின்பற்றியே பண்டைய அரசர்களின் ஆட்சி நிர்வாகம் செயல்பட்டுள்ளது. அரசனின் நேரடியான அதிகார அடுக்கு செயல்படும் இடமாக அமைச்சும், படைகளும் இருந்துள்ளன. அதனை மேலாண்மை செய்வதின் காரணமாக பிற நிர்வாகச் செயல்கள் செயலாக்கம் பெற்றுள்ளன** (Ilampuranar, 1998).

## அரசுரிமை தொடர்ச்சி

**பண்டைய தமிழர்கள் ஆட்சி அதிகாரங்களில் அரசனுக்குப் பின் அவனுடைய மூத்த மகனே அரசரிமை பெறுவோனாக இருக்கின்றான். தலைமுறை அடிப்படையிலான ஆட்சி முறையே அமைந்திருந்தது. அரசனுக்குரிய மகனை "கோமான்" என்ற சொல்லால்**

குறித்தனர். வாரிசு உரிமைக்கு அக்காலத்தில் “தாயம்” என்று பெயர் வழங்கப்பட்டது. தலைமுறை அடிப்படையில் அரசுரிமை பெறுதலையும், போர்களின் வெற்றியினால் பெறும் அரசனின் உரிமையும் வேறுபடுத்தியுள்ளனர். மக்களுக்கு இணக்கமான மன்னன் தேர்ந்தெடுப்பதும் அன்றைய வழக்கில் இருந்த்து. இதனைத் தொல்காப்பியத்தில் உள்ள “பிள்ளையாட்டு” என்னும் துறைமூலம் அறியமுடிகின்றது.

வாரிசு இன்றி அரசன் மறைந்துவிட்டால் புதுமையான முறையில் அரசனைத் தேர்ந்தெடுக்கும் பணியினை அரசின் முதன்மை நிலையில் அமைந்த சான்றோர்களும், அமைச்சர்களும் மேற்கொண்டனர். பட்டத்து யானையிடம் மாலையை அளித்து அது யாருக்கு அணிவிக்கின்றதோ அவன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான். அங்ஙனம் பட்டம் பெற்றவனாக கரிகாலன் இருந்துள்ளான்.

அரியணை ஏறுவதற்கான வயது வரம்பு அக்காலத்ல் குறிப்பிடப்படவில்லை. ஒருவன் எந்த வயதிலும் பட்டம் ஏற்கலாம் என்பதை,

“உருவப் பல்தே ரிளையோன் சிறுவன்

முருகன் சீற்றத்து உருகெழு குரிசில்

தாய்வயிற் றிருந்து தாயம் எய்தி” (பொருநர், 130-133)

என்ற பொருநராற்றுப்படை வரிகளால் அறியமுடிகின்றது. இதில் கரிகாற்சோழன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தாயத்தை எய்திவிடுகின்றான்.

## செங்கோல் ஆட்சி

பழந்தமிழ் மன்னர்கள் நடுவுநிலைமையோடு நீதி தவறாது செய்சோல் ஆட்சி புரிந்தனர் என்பதைப் பத்துப்பாட்டு பனுவல்கள் பதிவு செய்துள்ளன (Parimanam et al., 2004a). திருமாவளவனின் சோழ நாட்டில் பகைவர்களின் பயம் இல்லாது மக்கள் வாழ்ந்திருந்தனர் என்றும், வளம் நிறைந்த கடற்கரை ஊர்களைக் கொண்டது அவன் நாடென்றும் புகழப்படுதை,

“விலங்கு பகை அல்லது கலங்குபகை அறியா

கொழும் பல்குடிச் செழும்பாக்கத்து

குறும்பல் ஊர் நெழுஞ்சோணாட்டு” ( பட்டினப்பாலை. 26-28)

எனப் பட்டினப்பாலைச் சுட்டுகின்றது. விலங்குகளைத் தவிர பகைமையில்லாத நாடாகவும், பிற நாட்டின்மேல் பகைகொள்ளாத நன்மனம் உடையவனாகவும், மக்களைச் செல்வச் செழிப்போடு வாழவைப்பனாகவும் திருமாவளவன் இருந்துள்ளான்.

கரிகால் பெருவளத்தானின் ஆட்சி செங்கோலாட்சியாக அமைந்திருந்தது என்பதை,

“கரிகாற்பெருவளத்தானின் செங்கோல் ஆட்சி

அறனொடு புணர்ந்த திறன் அறி செங்கோல்” (பொருநர்.230)

என்று பொருநராற்றுப்படை குறிக்கின்றது. அறவழிப்பட்டதும், திறன் அறிந்து செய்வதுமாக அவனுடைய செங்கோன்மை அமைந்திருந்து என்கிறார்

முடத்தாமக்கண்ணியார். அதுபோன்றே தொண்டைமான் இளந்திரையனின் நீதிவழுவாமையை பெரும்பாணாற்றுப்படை,

"அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்" (பெரும்பாண்.36)

என்றும்,

"முறை வேண்டுநர்க்கும், குறைவேண்டுநர்க்கும்

வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருள்" (பெரும்பாண்.443-444)

என மக்களிடம் வேற்றுமை பாராமல் கதிரவன் காய்வதுபோல காவலன் தன் குடிகளைக் காய்ந்துள்ளான் என்பதைச் சுட்டுகின்றது. முறைவேண்டி வந்தவர்க்கும், குறைவேண்டி வந்தர்களுக்கும் வேண்டியவர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்பவனாக தொண்டைமான் இளந்திரையன் இதன்மூலம் அறியப்படுகின்றான்.

## படைமாட்சி

தன் சுற்றத்தைக் காத்தல் என்பது அரசனின் தலையாய கடமையாக இருக்கின்றது. போர் போன்ற ஆபத்துகளில் இருந்தும், குடிகளின் செல்வத்தைப் பாதுகாத்தும், வழிநடத்த தனக்கான ஆலோசனைக் குழுவினைக் கொண்டிருந்த தன்மையினை,

"அரியதந்து குடி அகற்றி

பெரியகற்று இசை விளக்கி

முந்நீர் நாப்பன் ஞாயிறு போலவும்

பல்மீன் நடுவன் திங்கள் போலவும்

பூத்த சுற்றமொடு பொலிந்த இனிது விளங்கி

பொய்யா நல்இலை நிறுத்த புனைதார்ப்

பெரும்பெயர் மாறன் தலைவனாக

கடந்து அடுவாய் வாள் இளம்பல் கோசர்

இயல்நெறி மரபின் நின்வாய் மொழிகேட்ப" (ம.கா.,766-774)

என நெடுஞ்செழியனின் நிர்வாகத்திறனைச் சுட்டுகின்றார் மாங்குடி மருதனார். அரிய பொருட்களை வேற்று நிலத்திலிருந்து கொணர்ந்தும், அதனை அனைவருக்கும் கொடுத்தும், குடிகளை செல்வத்தால் வளப்படுத்தியும் இருந்துள்ளான். மெய்நூல்களை ஓதி, அதன்வழி நின்றும், பழையன், கோசர் ஆகியோரை தன் ஆணையின்கீழ் நடக்கச் செய்யும் வலிமையினையும், நிர்வாகத் திறனையும் பெற்றிருந்தான்.

கரிகால் பெருவளத்தான் நினைத்தை முடிக்கும் ஆற்றல் பெற்றவன். அரியகாவல் அமைந்த மதிலை உடைய பகைவரின் ஊர் அனைத்தும் பாழ்படுத்தியும் சினம் தணியாத வலிமை பெற்றவனாக இருந்துள்ளான் என்பதை,

"அருங்கடி வரைப்பின் ஊர்கவின் அழிய

பெரும்பாழ் செய்தும் அமையான் மருங்கு அற

மலை அகழ்க்குவனே கடல் தூர்க்குவனே

வான் வீழ்க்குவனே வளி மாற்றுவன் என

தான் முன்னியதுறை போகலின்” (பட்டினம்.269-273)

என்ற வரிகள் குறிக்கின்றன. மலைகளைத் தோண்டியும், கடலைத் தூர்த்தும், வானத்தை வீழ்த்தியும், காற்றைத் தடுத்தும் தன் ஆணைக்குள் வைக்கும் வல்லமை படைத்தான் கரிகாலன். அத்தகையோன் எண்ணியதை முடிக்கும் ஆற்றல் பெற்றவனாக, நிர்வாகத் திறன் பெற்றவனாக இருக்கிறான் எனப் பட்டினப்பாலை மொழிகின்றது.

நினைத்ததை முடிக்கும் ஆற்றலும், வல்லமையும் அரசனின் அடையாளமாக இருக்க அவனது படைத்திறனே காரணமாக அமைகின்றது. நகர் காவலும், ஊர்காவலும் மன்னனின் நாட்டைக் காவல்செய்யும் தன்மைகளை திறம்பட விளக்கும் உறுப்புக்களாக அமைகின்றன. நகர்காவல் செய்பவர்கள் நகரைக் காவல் செய்வதுடன் ஒற்றறியும் பணியினையும் செய்கின்றனர். ஊர்காவல் செய்பவர்கள் இரவு நேரங்களில் ஊரினைத் திறம்படப் பாதுகாக்கும் பணியினைச் செய்கின்றானர். கள்ளவர்கள், கொள்ளையர்கள் முதலியோரிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் கடமை மன்னனையே சாரும் என்பதால் அதனைத் திறம்பட மன்னர்கள் செய்தனர்.

தெருக்களையும், நகரையும், ஊரையும் காவல் செய்வதற்கு காவற்படைகளை அமைத்த செய்தியினை,

“இரும்பிடி மேஎந்தோ வன்ன விருள்சேர்பு” (ம.கா. 634)

என மதுரக் காஞ்சி மொழிகின்றது. கள்வரைத் தேடும்பொழுது யானையை இரையாகத் தேடும் புலியினைப் போல செயல்பட்டனர் என்பதனையும், இரவில் ஆலம் ஏந்திய கையுடன் நகரினை உறங்காமல் காவல் செய்துள்ளனர் என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

## நட்டார்குடி உயர்த்தல்

மன்னவன் தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்துதல் என்பது அவனது நிர்வாகத்திறனை வலுவாக்கும் காரணிகளில் ஒன்றாக அமைகின்றது. தனக்கு உறுதுணையாக இருக்கும் நண்பர்களின் குடியினை உயர்த்தல் ஆட்சிக்கும், அரசுக்கும் மிகப்பெரும் துணையாகும். அத்தகையதொரு அரச நிர்வாகத்தைப் பழந்தமிழர் கொண்டிருந்தனர் என்பதை மாங்குடி மருதனார்,

“நட்டவை குடி உயர்க்குவை

செற்றவர் அரசு பெயர்க்குவை

பேர் உலகத்துமே எந்தோன்றிச்

சீருடைய விழுச் சிறப்பின்

விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்

இலங்குவளை இருஞ்சேரி

கட்கொண்டிக் குடிப்பாக் கத்து

நல் கொற்கையோர் நசைப் பொருந” (ம.கா.,131-138)

எனக் குறிக்கின்றார். நண்பர்களின் குடியினை உயர்த்தியும், பகைவர்களின் குடியினை அழித்தும், சான்றோரால் புகழப்படும் சிறந்த தலைமைப்பண்புடன் கொற்கை நகரமக்கள் விரும்பும் வீர மன்னனாக பாண்டியன் நெடுஞ்செழியன் இருந்தான் என்பதைக் குறிக்கின்றார்.

### முறை செய்யும் அவைகள்

சங்க காலத்தில் சட்டம் இயற்றல், நிர்வகித்தல், நீதி வழங்குதல் என்னும் மூன்று துறைகளுக்கும் மன்னனே தலைவனாக விளங்கியுள்ளான். நாட்டின் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநிறுத்துவதற்குத் தேவையெழும் நேரங்களில் மன்னனே ஆணைகளைப் பிறப்பித்துள்ளான். மக்களுக்கு தன் ஆளுகைக்கு உட்பட்ட அவைகளின் மூலம் நீதிவழங்கும் முறையினை பின்பற்றினான். அவைகள் மன்னனுக்கு அறிவுரை கூறும் பணியைச் செய்பவையாகவும் இருந்துள்ளன.

ஊரவை, அறங்கூறவையம், நாளவை, நாற்பெருங்குழு எனப் பல நிலைகளில் அவைகள்ஆட்சியமைப்புகளில் மன்னனுக்கு உதவியாக இருந்துள்ளன என்பதைத் தொல்காப்பியம்,

"எட்டுவகை நுதலிய அவையத்தானும்" (தொல்.பொருள்.75) எனச் சுட்டுகின்றது.

### ஊரவை

வயதாலும், அனுபவத்தாலும் முதிர்ந்த மக்கள் ஒன்று கூடி ஊருக்கு வேண்டிய நன்மைகளையும், வழக்குகளையும் கூறம் அவையாக ஊரவை அமைந்துள்ளது. இதனை "மன்றம்", "பொதியல்", "அம்பலம்" என்னும்பெயர்களால் குறித்தனர். இவ்வூரவையைக் குறித்து,

"அவையிருந்த பெரும் பொதியில்" (மா.கா., 161)

என மதுரைக்காஞ்சி சுட்டுகின்றது. இத்தகைய அவைகள் பெரும்பாலும் இலந்தை, பலா, விளா, வேம்பு போன்ற மரங்களின் கீழ் அமைந்திருந்தன என நச்சினார்க்கினியர் (பத்துப்பாட்டு, நச்சிசனார்கினியர் உரை, உ.வே.சா. பதிப்பு, ப.67) குறிக்கின்றார். இவ்வூரவைக்கு உறுப்பினர்கள் தேவை ஏற்படும்பொழுது அவர்களை மத்திரையிட்ட பனையோலை மூலம் வாக்குச்சீட்டினைப் பயன்படுத்தி தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை,

"கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்

பொறிகண் டழிக்கும் ஆவண மாக்கள்" (அகம். 77.7-8)

என அகநானூறு குறிக்கின்றது.

### அறங்கூறவையம்

நீதி வழங்குவதற்காக ஊர்புறங்களில் அமைந்துள்ள அவையாக ஊரவை செயல்பட்டது போன்றே, நகர்புறங்களில் அறங்கூறவையம் செயல்பட்டுள்ளது. ஊரவையில் விசாரிக்கப்பட்டு முறையான நீதி கிடைக்காத வழக்குகள் அறங்கூறவையத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன. ஊரவை பஞ்சாயத்து அமைப்பு போலவும்,

அறங்கூறவையம் நீதிமன்றம் போலவும் செயல்பட்டு வந்துள்ளது. மாங்குடிமருதனார் இவ்வவையம் பற்றி,

“அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்

செற்றமும் உவகையும் செய்யாது காத்து

ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்

சிறந்த கொள்கை அறங்கூறு அவையமும்” (ம.கா. 489-492)

எனக் குறிக்கின்றார். இவ்வவைக்கு சான்றோர்களைத் தேர்ந்தெடுப்பது அரசனின் கடமையாக இருந்திருக்க வேண்டும். இந்த அறங்கூறும் அவையில் நீதிப் பிறழ்வு ஏற்பட்டால் அது அரசனுக்கு இழிவைத் தருவதாக அமையும் என்பதனை,

“அறன்நிலை திரியா அன்பின் அவையத்துத்

திறன்இல் ஒருவனை நாட்டி முறை திரிந்து

மெலிகோல் செய்தேன் ஆகுக” (புறம்.71.7-9)

எனப் புறநானூறு மொழிகின்றது (Parimanam et al., 2004b. இத்தகு சிறப்புப் பெற்ற அவைதான் பாண்டிய நட்டில் அறம்நிலை பெற்றமைக்குக் காரணமாக அமைந்துள்ளது. இதனை,

“அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி

செற்றமும் உவகையும் செய்யாது காத்து

ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி

சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும்” (ம.கா. 489-493)

என மதுரைக்காஞ்சி அவையில் இருக்கும் சான்றோர்களை பகை, நட்பு, நொதுமல் என்ற மூன்றிடத்தும் பேறுபாடின்றி ஒப்பக் கருதும் நடுவு நிலை உள்ளம் உடையவர்களாக நீதி உரைப்பவர்களாக விளங்கினர் எனக் குறிக்கின்றது.

## நாளவை

“பெருநாளவை”, “ஓலக்கம்”, “நாளோலக்கம்” எனப் பல பெயர்களால் மன்னர்கள் அலங்கரித்த அவைகள் குறிக்கப்பெற்றுள்ளன. இவ்வவையில் அரசர்கள், அமைச்சர்கள், ஐம்பெரும்குழுக்கள், எண்பேராத்தினரும் இடம்பெற்றிருந்தனர். மன்னர்கள் முறைசெய்து நீதிவழங்கினர். இவ்வவையில் புலவர்கள் மட்டும் அனுமதியின்று நுழையும் பெருமை பெற்றிருந்தனர் என்பதை,

“நசையுநர்த் தடையால் நன்பெருவாயில்” (பொருநர். 66)

எனப் பொருநராற்றுப்படையும்,

“பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்

அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்

கடவுள் மால்வரை கண் விடுத்தன்ன

அடையா வாயில் அவன் அருங்கடை குறுகி” (சிறுபாண். 203-206)

எனச் சிறுபாணாற்றுப்படையும் சுட்டுகின்றது. இந்நாளவையில் கரிகால் பெருவளத்தான் முதியவன் வெடமிட்டு ஆணை வழங்கிய செய்தியினை,

"................... முதியோர்

அவைபுகு பொழுதில் தம்பகைமுரண் செலவும்" (பொருநர்.187-188)

எனப் பொருநராற்றுப்படை குறிக்கின்றது. ஊரவையிலும், அறங்கூறவையத்திலும் முறையான தீர்வு ஏற்படாத நிலயில் நாளவைக்கு மன்னன் முன் கொண்டு செல்லப்பட்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ள முறையினை அறியமுடிகின்றது.

## நாற்பெருங்குழு

ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்றவைகளைப் போன்றே நாற்பெருங்குழு என்ற அமைப்பும் செயல்பட்டு வந்துள்ளது. இந்த நாற்பெருங்குழுவில் புரோகிதர், படைத்தலைவர், தூதர், ஒற்றர் போன்றோர் இம்பெறுவர். இதனை மதுரைக்காஞ்சி,

"மழை ஒழுக்கு அறாஅப் பிழையா விளையுள்

பழையன் மோகூர் அவையகம் விளங்க

நான்மொழிக் கோசர் தோன்றியன்ன

தாம்மேஎந் தோன்றிய நாற்பெருங்குழுவும்" (ம.கா. 507-510)

என எடுத்தியம்புகிறது. அரசன் தனிப்பட்ட நிலையில் நிர்வாகம் தன்னிடம் இருந்தபோதும், தகுந்த சான்றோர்களின் அறிவுரையை கேட்டே செயல்பட்டுள்ளான். படைவலிமையும், ஒற்றர்களின் துணையும், அவர்களால் நாட்டின் இரகசியங்கள் பாதுகாக்கப்படுவதும் மிக முக்கியம். அத்தகையதொரு மக்களைப் பெற்றிருப்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். அதற்கு அரசன் அரசியல் அறிவோடு நிர்வாகத்திறனும் பெற்றிருப்பது அவசியமாகிறது. அத்தகுதொரு நிர்வாகத் திறனை மதுரைக்காஞ்சியில் பாண்டிய மன்னனிடமும் காணமுடிகிறது.

## காவிதி மாக்கள்

அசரனின் "சுற்றமாக" விளங்கும் அமைச்சர்களுக்கு "காவிதி" என்ற பட்டம் வழங்கப்பட்டமையை மதுரைக்காஞ்சி வழி அறியமுடிகிறன்றது. அரசன் தீயவழியில் செல்லாமல் அவனைக்காதது, பழிவராமல் நீக்கி, அவன் புகழை எங்கும் பரவச் செய்யும் அமைச்சர்களை பாண்டியன் நெடுங்செழியன் பெற்றிருந்தான் என்பதை,

"செம்மை சான்ற காவிதி மாக்களும்" (ம.கா. 499)

என்ற அடிகளால் அறியலாம். "ஏலாதி", "காவிதி" என்ற பட்டங்கள் மன்னரால் வழங்கப்பெறுபவை. முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை நேரும் வேளாளரை நச்சினார்கினியர் "பாண்டி நாட்டில் காவிதிப்பட்ட எய்தியோரும்" (தொல்.அகம்.30) எனக் குறிக்கின்றார்.

## குடிகாக்கும் திறன்

மன்னன் தன் குடிகளைக் காக்கும் திறன் கொண்டவனாக இருக்கவேண்டும். பகை அரசர்களிடம் இருந்தும், இயற்கையினால் ஏற்படும் இன்னல்களிலிருந்தும் தன் குடிகளைக் காக்கும் திறனைப் பெற்றவனாக இருக்க வேண்டும். மக்களுக்குத் தேவையான வளனை உருவாக்கும் பணியினையும் அவன் செய்திருக்க வேண்டும் என்பது பழந்தமிழர் கருத்தாக உள்ளது. அத்தகு சிறப்புப்பெற்ற அரசனை புலவர்களும் புகழ்ந்துள்ளனர்.

"காடுகொன்று நாடு ஆக்கி

குளம்தொட்டு வளம் பெருக்கி

பிறங்க நிலை மாடத்து உறந்தை போக்கி

கோயிலொடு குடிநிறீஇ" (பட்டினப்பாலை.283-286)

எனக் காட்டினை அகற்றி நாடு நகரமாக்கி, குளங்கள் வெட்டி, நாட்டின் வளத்தைப் பெருக்கும் மிகச்சிறந்த நிர்வாகத்திறனை அரசன் பெற்றிருந்தான் என்பதை பட்டினப்பாலை குறிக்கின்றது. இதே கருத்தினை பொருநராற்றுப்படையும் கரிகாலனின் நிர்வாகத் திறனை,

"எரியும் ஏற்றத்தினாலும் பிறர் நாட்டு

வாரி சுரக்கும் வளனெல்லாம் தேரின்

அரிகாலின் கீழுகூவும் அந்நெல்லே சாலும்

கரிகாலன் காவிரி சூழ்நாடு" (பொருநர். வெண்பா)

எனச் சுட்டுவதைக் காணமுடிகின்றது. கரிகால் பெருவளத்தான் மக்களைக் காக்கும் பொருட்டு காவிரிக்கு கரை அமைத்தான் என மொழிகினறது. ஒரு நாட்டின் வேளாண்மையும், அது சார்ந்த தொழிலும் வளம்பெற மன்னனின் நிர்வாகத்திறன் பெரிதும் காரணமாக அமைகிறது என்பதை இதன்மூலம் அறியலாம்.

## தொழில்முறை நிர்வாகம்

சங்கத்தமிழர் தொழில் தொடர்பான நிர்வாகத்தில் திறமை உடையவராக இருந்தனர். ஏற்றுமதி, இறக்குமதி நிலைகளிலும் சிறந்தொரு முறையான வணிக நிர்வாகத்தையும் பின்பற்றினர். பொருட்களை விற்பதற்கான அங்காடிகள், கொடிகள், முத்திரைகள் எனப் பல நிலைகளில் வணிக நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டதை,

"தொல்இசைத் தொழில் மாக்கள்" (பட்டினப்பாலை.121)

என மொழிகின்றது. இங்ஙனம் தொழில் செய்யும் மக்களைக் காப்பதற்கு காவல்கள் நியமிக்கப்பட்டிருந்தைப் பட்டினப்பாலை சுட்டுகின்றது. மேலும்,

"வான் முகந்த நீர் மலைப்பொழியவும்

மலைப் பொழிந்த நீர் கடற்பரப்பவும்

மாரி பெய்யும் பருவம் போல

நீரினின்று நிலத்து ஏற்றவும்

நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்

அளந்த றியாப் பலபண்டம்" (பட்டினப்பாலை. 126-131)

எனக் கடலில் முகந்து சென்ற நீரை மழையாக மலையில் கொட்டியும், மலையில் மழையாக விழுந்த நீரை மீண்டும் ஆறுகள் வழியாக கடலுக்குக் கொண்டு சேர்க்கும் மாரிக்கால மழைமேகம்போல அயல்நாட்டு வணிகம் நடைபெற்ற செய்தியினைக் குறிக்கின்றது. அரசனின் நிர்வாக ஆளுமைகள் மக்களின் தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களுக்கான கருவிகள், பொருட்கள் உற்பத்திக்கு உதவுவது போலவும் அமைந்திருத்தல் வேண்டும். அத்தகையதொரு அரச நிர்வாகமே உயர்ந்த நிர்வாகமாக அமையும் என்பதை ஆற்றுப்படை நூல்கள் (பெரும்பா. 99-100), சிறுபாண்.51-52, 252-257, பொருநர்.29,117,242 போன்றவை)தெளிவுறுத்துகின்றன.

## முடிவுரை

பத்துப்பாட்டில் அரச நிர்வாகமானது மேலாண்மையடிப்படையில் அரசனின் சார்பாகவும், அவனுடைய நிர்வாகம் சார்ந்த குழுக்களின் இயக்களின் அடிப்படையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. நாடு, மக்கள், வணிகம், ஆட்சி என பல நிலைகளில் நிர்வாகத் திறனை வெளிக்கொணரும் ஆளுமையுடையவனாக சங்ககால மன்னர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர்.

## References

Chitra, C. (2016) Tamil Ilakiyangalil Nirvagaviyal Sinthanaikal, Semmuthai pathipagam, Chennai, India

Ilampuranar (1998) Tholkapiyam, Kalaga Veliyedu, Chennai, India

Parimanam, A.M., Mohan, R., Balasubramaniyam, K.V. (2004) Pathupattu, New Century Book House, Chennai, India

Parimanam, A.M., Mohan, R., Balasubramaniyam, K.V. (2004) Purananuru, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License